# விஜயபாரதம்

07.09.2020 மலர் - 1, இதழ் - 155 VIJAYABHARATHAM DAILY

மின்னனு தின இதழ் (தனிச்சுற்று)


## வணக்கம்

# போலி மொழிப்பற்று

"ஹிந்தி தெரியாது போடா" என்ற டிஷர்ட் அணிந்து யுவன் ஷங்கர் ராஜா உள்ளிட்ட சிலர் சமூக வலைதளங்களில் பதிவிட்டுள்ளனர். ஆனால் அந்த வார்த்தைகள் முழுமையாக தமிழில் இல்லை. இவர்களில் எத்தனை பேர் தமிழை சுத்தமாக பேசுவார்கள், இவர்களின் குழந்தைகள் தமிழ் வழியில் படிக்கின்றனரா? யுவனின் தற்போதைய பெயர், குடும்பத்தினர் பெயர்கள் தமிழில் உள்ளதா என நாம் சிந்திக்க வேண்டும்.

தமிழர்கள் பலருக்கும் ஹிந்தி தெரியாது. எனக்கும்கூட தெரியாது. ஆனால் பாரதத்தில் நம்மை தவிர, ஏனைய மாநிலத்தவர்களுக்கு பெரும்பாலும் ஹிந்தி தெரியும். அதனால் அவர்களின் மொழி அழியவில்லை. நம்மைவிட சுத்தமாகவே தாய்மொழி பேசுகின்றனர். ஒரு மொழியை கற்பதால் மொழியறிவு வளருமே அன்றி தாய்மொழி அழியாது. குழந்தைகளுக்கு ஆறு மொழிகளை கற்கும் திறன் உள்ளது என்கிறது விஞ்ஞானம்.

ஹிந்தி என்றாலே கோபம், வெறுப்பு என மூளை சலவை செய்யப்பட்ட தமிழகம் விசித்திரமாக நடந்து கொள்கிறது. உண்மையில் இந்த கோபம் யார் மீது வரவேண்டும்? மற்ற மாநிலத்தவர் எல்லாம் ஹிந்தி படிக்கையில், நம்மை மட்டும் ஹிந்தி படிக்க விடாமல் செய்தவர்கள், தங்கள் குடும்பத்தினர் ஹிந்தி படிக்கலாம், தங்கள் பள்ளிகளில் ஹிந்தி கற்பிக்கலாம் என்கிற சுயநல திமுகவின் மீதல்லவா கோபம் வரவேண்டும். ஹிந்தி வேண்டாம் என்றால், அண்டை மாநில மொழிகளையாவது குழந்தைகளை கற்க செய்யுங்கள். அவர்களாவது திராவிட மாயை இன்றி வளரட்டும். உண்மையை உணர்வோம், சுயநலவாதிகளை இனம் கண்டு ஒதுக்குவோம்.

மும்மொழி கொள்கையை எதிர்க்க திராவிட கும்பல் செய்யும் மறைமுக சதியா?

## பரதன் பதில்

**இயற்கை வழிபாட்டில் மரத்தை வணங்குவது ஏன்?**

**மெயிலில் ச. மெய்யப்பன், சென்னை**

எதிர்பார்ப்பின்றி நிழல் தருகிறது, கல்லால் அடித்தாலும் பழத்தை தருகிறது. வெட்டினாலும் பலகையாகிறது. விலங்குககளுக்கு உணவாகிறது, இப்படி காரணங்கள் பல உண்டு.

## கங்கனாவின் தைரியம்

"சினிமா கொள்ளையர்களைக் காட்டிலும், மும்பை போலீசைக் கண்டால்தான் பயம், மும்பையில் ஆசாதி பதாகைகள் காணப்படுவது இன்னுமொரு பி.ஓ.கே. (பாகிஸ்தான் வசமுள்ள காஷ்மீர்) போல தோன்றுகிறது!" என டுவிட்டரில் உண்மையை வெளியிட்டிருந்தார் இந்தி நடிகை கங்கனா ரனாவத். ஆனால் சிவசேனையின் சஞ்ஜை ராவத் மும்பை வராதே என மிரட்டியுள்ளார். பத்திரிக்கையாளர் சந்திப்பில், நடிகையை பற்றி அநாகரீகமாக பேசியுள்ளார். நடிகை சிவாஜியை அவமானப்படுத்திவிட்டதாக பொய்குற்றம் சாட்டியுள்ளார் ராவத். மும்பைக்கு வருவேன் என வீரமாக சவால் விடுத்துள்ளார் கங்கனா.

தன் குட்டு வெளிப்பட்டுவிட்டதால் ஆத்திரம் தாங்காமல் குதிக்கிறது சிவசேனா.

## திரிணாமுல் அராஜகம்

மேற்கு வங்கத்தில் பதர்கட்டா இடத்தை சேர்ந்தவர் ராபின் பால். இவர் பாஜக தொண்டர். தன் வீட்டருகில் உள்ள மரத்தை வெட்ட வந்தவர்களை அவர் தடுத்துள்ளார். திரிணாமுல் காங்கிரஸை சேர்ந்த அந்த 50 பேர் கொண்ட கும்பல் இதனால் அவரை கொடூரமாக தாக்கியுள்ளது. இறக்கும் தருவாயில் ராபின் குடிக்க நீரை கேட்டுள்ளார். அதையும் தராமல் கொன்றுள்ளனர் அந்த மனசாட்சி இல்லாத திரிணாமுல் கட்சியினர்.

மம்தாவின் தலைமையில் அசுர ராஜ்ஜியம் நடப்பதாகவே மக்கள் கருதுகின்றனர்.

# கோயில் நிலங்கள் மீட்பு

வழக்கறிஞர் ஜெகநாத் தாக்கல் செய்த மனுவால், உயர்நீதிமன்ற உத்தரவுப்படி திருப்போரூர் முருகன் கோயிலுக்கு சொந்தமான 60000 கோடி நிலம் தப்பியது. அதே போல முஸ்லிம்களால் ஆக்கிரமிக்கப்பட்ட விருகம்பாக்கம் சுந்தரவரதராஜர் கோயிலின் 10 ஏக்கர் நிலம், 20 வருட சட்டப் போராட்டத்தால் மீட்கப்பட்டுள்ளது. கோயில் நில ஆவணங்கள் வேண்டுமென்றே சரியாக பராமரிக்கப்படுவதில்லை. கையூட்டு, போலி பத்திரப்பதிவு, ஆக்கிரமிப்பு என இதுவரை ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலங்கள் அறநிலையத்துறை அலட்சியத்தால் கபளீகரம் செய்யப்பட்டுள்ளது.

ஹிந்து தர்மத்தை அழிப்பதுதான் அறநிலையத் துறையின் மறைமுக திட்டமோ?

# பாரதம் கண்டுபிடித்த பேட்டரி

சமீபத்தில் ஷிவ்நாடார் பல்கலைக் கழகத்தை சேர்ந்த பிலேஷ் லோகாப் குழுவினர், புதிய வகை பேட்டரியை கண்டுபிடித்துள்ளனர். ஐந்து வருட ஆராய்ச்சியில் இது கண்டுபிடிக்கப்பட்டது. இதில் லிதியம் சல்பர் பயன்படுகிறது. லிதியம் அயன் பேட்டரியை விட மூன்று மடங்கு சக்தி வாய்ந்தது. ஒரே சார்ஜில் டெல்லியில் இருந்து மும்பை செல்ல முடியும். உயிரி தொழில்நுட்பம், லவங்க எண்ணெய், பயோ வேஸ்ட் பொருட்கள் பயன்படுத்துவதால் சுற்றுசூழலுக்கு மிகவும் உகந்தது. பாதுகாப்பானது என கூறப்பட்டுள்ளது.



சுற்றுசூழல் மாசில்லா உலகம் படைக்க இது போன்ற புதிய கண்டுபிடிப்புகள் அவசியம் தேவை.

# சிந்தனை செய் மனமே!

## தோல்வி உன்னை துரத்தினால்

## நீ வெற்றியை நோக்கி ஓடு . . .

# கை மெல் கிடைத்த பலன்

அரசன் சகுனங்களில் ஆழ்ந்த நம்பிக்கை உடையவன். அரண்மனை சோதிடர் இந்த நம்பிக்கையை வைத்து குளிர் காய்ந்துக் கொண்டிருந்தார். ஒரு நாள் 'அரசே, அதிகாலை எழுந்தவுடன் இரண்டு காக்கைகளை ஒன்றாகப் பார்த்தால் நாள் சிறக்கும்' என்றார். மன்னன் சேவகனை அழைத்தான். காலையில் எங்காவது இரண்டு காக்கைகள் தென்பட்டால் உடனே தனக்குத் தெரிவிக்க வேண்டும் என்று கட்டளையிட்டான். மறுநாள் பொழுது விடியும் முன்பே சேவகன் தெருவில் அலையத் தொடங்கி விட்டான்.

அரண்மனைக்குப் பக்கத்துத் தெருவில் இரண்டு காக்கைகள் ஒன்றாக இருப்பதை கண்டான். அடடா! நல்ல சகுனம், இன்று மன்னர் நமக்கு பதவி உயர்வு கொடுப்பார்என்று மகிழ்ச்சியுடன் ஓடிவந்து மன்னரிடம் சொன்னான். மன்னனும் அந்த இடத்திற்கு ஓடினான். அதற்குள் ஒரு காக்கை பறந்து சென்றுவிட்டது. மன்னனுக்கு மூக்கின் மேல் கோபம். தளபதியை அழைத்து 'இந்த சேவகனுக்குப் பத்து கசையடி கொடு' என்று உத்தரவிட்டான். சேவகன் சிரிக்க ஆரம்பித்து விட்டான். மன்னனுக்கு ஆத்திரம் அதிகமானது. 'நீ சிரித்ததற்கு சரியான காரணம் சொல்லாவிட்டால் இன்னமும் பத்து கசையடி' என்றான் அரசன். சேவகன் 'மன்னரே' இன்று நான் மட்டும்தான் அதிகாலையில் இரட்டைக் காக்கைகளைப் பார்த்தேன். கை மேல் பலன் கிடைத்துவிட்டது என்றான். மன்னருக்கு சுருக்கென்று ஏதோ உரைத்தது.

